# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை: மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப.(ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை – 600 032.

ஆணை எண்.43/மா/2021
நாள். 05.07..2021

திரு எம். லெட்சுமணப்பெருமாள்,
மதுரை மாநகராட்சி – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையாளர்
உதவி ஆணையாளர், மண்டலம் –3 – எதிர் மனுதாரர்கள்.

மதுரை மாநகராட்சி மண்டலம்–3, க.எண்.18/19, சாமி ஆசாரி சந்து, சின்னகடை தெரு, தெற்கு வாசல், மதுரை என்ற முகவரியில் வசிக்கும் திரு எம்.லெட்சுமணப்பெருமாள் அவர்களின் 16.03.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 43/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

மதுரை மாநகராட்சி மண்டலம் –3 , க.எண்.18/19, சாமி ஆசாரி சந்து, சின்னகடை தெருவில் வசிக்கும் எம். .லட்சுமணப்பெருமாள் என்பவர் தமக்கு பூர்வீக பாத்தியமான சொத்து மதுரை மாநகராட்சி வார்டு எண்.66–ல் உள்ளது என்றும் இதன் சொத்து வரி விதிப்புகள் மேற்கோற்பு புதிய வரி விதிப்பு எண். 115/066/01768 பழைய வரி விதிப்பு எண்.115/75674 எம்.லெட்சுமணப்பெருமாள் என்ற தமது பெயரிலும் அடிமனை வரி விதிப்பு எண். 115/066/01769 பழைய வரிவிதிப்பு எண்.115/75675 திருவாதிரை ஆருத்ரா தரிசனம் என்ற பெயரிலும் வரி பதிவேட்டில் வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் மனு குறித்து மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளரின் அறிக்கை பெறப்பட்டது. மேலும் முறையீட்டு மனுதாரர், எதிர் மனுதாரரான மதுரை மாநகராட்சி உதவி ஆணையாளர், மண்டலம் 3 ஆகியோர்களை நேரடி விசாரணை செய்யும் பொருட்டு 15.02.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. ஆனால் மனுதாரர் 15.02.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையாளர் அன்றைய விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்கு மூலம் அளித்துள்ளார்.

3) மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ல் உதவி ஆணையாளராகப் பணிபுரியும் எஸ். சண்முகம் ஆகிய நான் திரு எம்.லெட்சுமணப்பெருமாள் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவத்தில் அளித்துள்ள முறையீட்டு மனு தொடர்பாக 15.02.2021 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி முறையீட்டு மனு தொடர்பாக எனது 15.02.2021 நாளிட்ட அறிக்கையினை எனது வாக்கு மூலமாக சமர்ப்பிக்கின்றேன். மேலும் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் அறிவுறுத்தியபடி ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் தொடர்பாக வருவாய் துறை கணக்கில் உள்ள "அ'' பதிவேடு நகலினை சரிபார்த்தும், மேலும் வரி விதிப்பு எந்த நாளில் இருந்து செய்யப்பட்டுள்ளது மற்றும் மாற்றம் எந்த நாளில் செய்யப்பட்டுள்ளது என்பதனை ஆவனங்களை பரிசீலித்து கண்டறிந்து அடிமனை வரி மனுதாரர் பெயரில் ஏற்கனவே தாக்கல் ஆகியுள்ளதா என்பதனை உறுதிபடுத்தி இது தொடர்பான நீண்ட அறிக்கையை முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

4) உதவி ஆணையாளர் 15.02.2021 அன்று தமது வாக்கு மூலத்தில் தெரிவித்ததுபோல் 17.04.2021 நாளிட்ட தமது அறிக்கையை அனுப்பியுள்ளார். உதவி ஆணையாளர் தமது அறிக்கையில் மண்டலம் 3 வார்டு எண்.66–ல் உள்ள பழைய வரி விதிப்பு எண்.75675 (அடிமனை ), கதவு எண்.5, சீனி ஆசாரி சந்து என்ற முகவரிக்குட்பட்ட அடிமனை சொத்து திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் என்ற பெயரிலும் வரிவிதிப்பு எண்.75674 (மேற்கோப்பு வரி) திரு M. லெட்சுமணபெருமாள் என்பவர் பெயரிலும், இருந்து வந்துள்ளது. திரு M. லெட்சுமணபெருமாள் பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் எதுவும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5) மேலும், இது தொடர்பாக மனுதாரர் திரு.M. லெட்சுமணப்பெருமாள் மற்றும் திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் தொடர்புடைய நபர்களுக்கு தன்னால் அழைப்பாணை அனுப்பப்பட்டு கடந்த 16.04.2021 அன்று விசாணை நடத்தப்பட்டதாகவும் இவ்விசாரணையில் மனுதாரர் திரு M. லெட்சுமணப்பெருமாள் என்பவர் தமது சொத்துக்கு தொடர்பான ஆவணங்கள் எதனையும் சமர்ப்பிக்கவில்லை. ஆனால் இவர் மேற்கண்ட வரிவிதிப்பில் " திரு எம். லெட்சுமணப்பெருமாள் திருவாதிரை ஆருத்ரா தரிசனம்

டிரஸ்ட் '' என பெயர் மாற்றம் செய்து தருமாறு மட்டும் கேட்டுக் கொண்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

6) மேலும், திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் தொடர்பாக திரு. பாலசுப்பிரமணியன் த/பெ. கோபாலகிருஷ்ணன் என்பவரிடம் விசாரணை செய்யப்பட்டதில் மேற்கண்ட வரிவிதிப்பு செய்யப்பட்ட வீடு முற்றிலும் திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட்க்கு சொந்தமானது எனவும் தனிநபர் எவரும் உரிமை கோர இயலாது எனவும், இந்த வீட்டில் தற்பொழுது டிரஸ்ட்க்கு தொடர்புடைய இவரின் தந்தை திரு. கோபாலகிருஷ்ணன் த/பெ. குருசாமி ஆசாரி என்பவர் கடந்த 70ஆண்டுகளாக வசித்து வருவதாகவும், இவ்வீட்டிற்கு திரு. லெட்சுமணப்பெருமாள் என்பவர் முறைகேடாக வரிவிதிப்பு செய்ய முயற்சி செய்கிறார் எனவும், எனவே, மேற்கண்ட வீட்டிற்கான வரிவிதிப்பினை திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் என்ற பெயரிலேயே வைத்திடவும் திரு பாலசுப்பிரமணியன் கேட்டுக் கொண்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

7) இது தொடர்பாக தன்னால் வார்டு 66 கதவு எண் 5 சீனி ஆசாரி சந்து என்ற முகவரியில் அமைந்துள்ள குடியிருப்பில் நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், மேற்கண்ட குடியிருப்பு திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட்க்கு பாத்தியப்பட்டது எனவும், மனுதாரர் திரு M. லெட்சுமணப்பெருமாள் என்பவர் சம்பந்தப்பட்ட கட்டிடத்தில் குடியிருக்கவில்லை என்பதும் இவ்வீட்டில் திரு.கோபாலகிருஷ்ணன் த/பெ. குருசாமி ஆசாரி என்பவர் கடந்த 70 ஆண்டுகளாக குடியிருந்து வருவதாகவும், தெரிய வந்துள்ளது என்றும் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார்.

8) மேலும் மேற்கண்ட வீடு அமைந்துள்ள நிலம் வருவாய் கிராம கணக்கில் வார்டு 03 பிளாட் 8–ல் TS. No. 1111 ல் சர்கார் நஞ்சை திருவாதிரை ஆருத்ரா தரிசனம் தர்மம் பாத்தியப்பட்டது என பதிவுகள் உள்ளது என்றும் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார்.

9) இந்நேர்வில் மேற்கண்ட சொத்து வருவாய் கணக்குகளில் திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் பெயரில் உள்ளதாலும், வீட்டில் கடந்த 70 ஆண்டுகளாக மனுதாரர் இல்லாமல் வேறொரு நபர் குடியிருந்து வருவதாலும், மனுதாரரிடம் மேற்கண்ட சொத்துக்கான உரிய பதிவு ஆவணங்கள் இல்லாததாலும் மனுதாரருக்கு மேற்கண்ட சொத்திற்கு மேற்கோப்பு வரி மற்றும் அடிமனை வரி போன்ற வரிவிதிப்புகள் செய்ய இயலாது என்று தெரிவித்து மேற்படி பெயர்மாற்றம் தொடர்பாக, திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் மூலம் திரு M. லெட்சுமணபெருமாள் பாத்தியப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க கோரி திரு M. லெட்சுமணபெருமாள் என்பவருக்கு பல முறை இவ்வலுவலக கடிதங்களின் வாயிலாக தெரிவிக்கப்பட்டும், இதுவரை மனுதாரரால் எவ்வித ஆவணங்களும் சமர்ப்பிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

10) மேலும், மேற்கண்ட சொத்து தொடர்பாக தங்களுக்கு ஆட்சேபனை மற்றும் வில்லங்கம் விவகாரங்கள் ஏதேனும் இருப்பின் உரிய பாதுகாப்பு கோரி நீதிமன்றத்தின் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ளுமாறும், மேலும், மேற்படி அடிமனை பாத்தியம் தொடர்பாக தங்களால் வழக்கு ஏதேனும் தொடரப்பட்டிருப்பின் மேற்கண்ட வழக்கிற்கு வழங்கப்படும் தீர்ப்புரையின் அடிப்படையில் தாங்கள் கோரியவாறு அடிமனை பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக மேல்நடவடிக்கை எடுக்க இயலும் என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து கடந்த 21.01.2020–ல் மக்கள்குறைதீர்க்கும் முகாம் நாளன்று மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் 1924–ம் ஆண்டில் 1897 எண்ணாக பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்கண்ட சொத்து நடராஜ சுவாமிக்கு வருடாவருடம் திருவாதிரை என்ற ஆர்த்தியும், பூஜை முதலானதுகள் செய்து வருவது என்றும் மேற்படி சொத்தை சொந்த உபயோகமாக உபயோகித்து கொள்ள எவ்வித பாத்தியமும் இல்லை என ஒன்பது நபர்களின் சம்மதத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் வரி விதிப்பு எண். 75674–ஐ திருவாதிரை, ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் என்ற பெயருக்கு கடந்த 19.03.2020–ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, உரிய தகவல் மனுதாரருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

11) மனுதாரரின் முறையீட்டு மனு மற்றும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையாளரின் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவைகள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரரான திரு எம். லெட்சுமணபெருமாள் தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரக்கோரும் அடிமனை வரிவிதிப்பு எண்.75675 என்ற சொத்தை திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட்டால் தமது பெயருக்கு பதிவு செய்து தரப்பட்ட ஆவணங்கள், பட்டா போன்ற எதையும் சமர்ப்பிக்கவில்லை. மேலும் 21.10.2020–ல் மக்கள் குறைதீர்க்கும் முகாம் நாளன்று சமர்ப்பித்த ஆவணத்திலும் மேற்கண்ட சொத்து நடராஜ சுவாமிக்கு வருடாவருடம் திருவாதிரை என்ற ஆர்த்தியும் பூஜை முதலானதுகளை செய்து வருவது என்றும் மேற்படி சொத்தை சொந்த உபயோகமாக உபயோகித்துக் கொள்ள எந்தவித பாத்தியமும் இல்லை என ஒன்பது நபர்களின் சம்மதத்துடன் பதிவு செய்யப்ப்ட்டுள்ளது. இதில் திரு எம்.லெட்சுமணபெருமாள் பெயர் ஏதும் குறிப்பிடப்படவில்லை.

12) மேலும் மேற்கண்ட வீடு அமைந்துள்ள நிலம் வருவாய் கிராம கணக்கில் வார்டு 3 பிளாட் 8–ல் TS No. 1111–ல் சர்கார் நஞ்சை திருவாதிரை ஆருத்ரா தரிசன தர்மம் பாத்தியப்பட்டது என உள்ளது. மற்றும் மனுதாரர் கடந்த 70 ஆண்டுகளாக அந்த வீட்டில் குடியிருக்கவில்லை. எனவே மனுதாரர் உரிமை கொண்டாடும் சொத்திற்கு எந்தவித ஆவணத்தையும் சமர்ப்பிக்காத நிலையில், உதவி ஆணையாளர் மண்டலம் –3 மதுரை மாநகராட்சி அவர்களின் அறிக்கையை ஏற்று மனுதாரருக்கு மேற்கண்ட சொத்திற்கு

மேற்கோப்பு வரி மற்றும் அடிமனை வரி போன்ற வரி விதிப்புகள் செய்ய இயலாது என்று 19.03.2020–ல் வரிவிதிப்பு எண்.75675 –ஐ திரு M. லெட்சுமணபெருமாள் பெயரில் இருந்து திருவாதிரை ஆருத்ரா தரிசனம் டிரஸ்ட் என்ற பெயருக்கு மாற்றம் செய்தது சரியானது தான் என இம்முறை மன்றம் முடிவு செய்வதோடு இம்மனுவின் மீதான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 05 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

1) திரு எம். லெட்சுமணபெருமாள்,
18/19, சாமி ஆசாரி சந்து,
சின்னகடைத் தெரு, தெற்குவாசல்,
மதுரை –1

2) ஆணையாளர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

3) உதவி ஆணையாளர்,
மண்டலம் –3,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

நகல்.
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்